அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2023

# தமிழ்

# ஆண்டு 7

| | |
|---|---|
| நேரம்: 150 மணித்துளிகள் | மொத்தப்புள்ளிகள்: 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| நாள்: 03.06.2023 | பக்கங்கள்: 16 |

சுட்டெண்: □□□□□□□□□□

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. 'அடங்காப்பற்று' எனச் சிறப்பாக அழைக்கப்படுவது
   1. பொலநறுவை
   2. கண்டி
   3. வன்னி
   4. சிலாபம்

2. செல்வான் என்பதன் எதிர்மறை வினை
   1. செல்கிறான்
   2. செல்லமாட்டான்
   3. சென்றான்
   4. செல்

3. தென்றல் காற்று சிலுசிலு என வீசியது. சிலுசிலு என்பது
   1. அடுக்குத்தொடர்
   2. இணைமொழி
   3. அடுக்கிடுக்குத்தொடர்
   4. இரட்டைக்கிளவி

4. இரை தேடச் சென்ற பறவைகள் தம் இருப்பிடத்துக்குத் திரும்புவது
   1. காலையில்
   2. நண்பகலில்
   3. மாலையில்
   4. அதிகாலையில்

5. மூன்று + மூன்று என்பதைச் சேர்த்தெழுதினால்
   1. மூன்றுமூன்று
   2. மூன்றும்மூன்று
   3. மும்மூன்று
   4. முவ்மூன்று

6. உறக்கம் என்பதன் எதிர்ப்பொருட் சொல்
   1. கலக்கம்
   2. விழிப்பு
   3. நிறைவு
   4. நித்திரை

1 2 3 4

7. வயலும் வயல் சார்ந்த நிலமும்
   1. முல்லை
   2. குறிஞ்சி
   3. நெய்தல்
   4. மருதம்

8. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும். இதில் வந்துள்ள இடைச்சொல்
   1. கண்
   2. எண்
   3. தகும்
   4. உம்

9. வாழ்வில் இன்பதுன்பம் மாறிமாறி வரும். இதில் இணைமொழி
   1. மாறிமாறி
   2. இன்பதுன்பம்
   3. துன்பம்
   4. வாழ்வில்

10. பண்டாரவன்னிய மன்னன் எதிர்த்துப் போராடியது
   1. போர்த்துக்கேயரையும் ஒல்லாந்தரையும்
   2. ஒல்லாந்தரையும் பிரித்தானியரையும்
   3. போர்த்துக்கேயரையும் பிரித்தானியரையும்
   4. பிராஞ்சியரையும் பிரித்தானியரையும்

11. பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடிப் படி. இச்சொல்லியம்
   1. ஏவற்சொல்லியம்
   2. கூற்றுச்சொல்லியம்
   3. வினாச்சொல்லியம்
   4. மெய்ப்பாட்டுச்சொல்லியம்

12. ஈழத்தில் தோன்றிய அரசுகளின் நடுவண் அரசாக விளங்கியது
   1. கொழும்பு
   2. அம்பாறை
   3. அநுராதபுரம்
   4. யாழ்ப்பாணம்

13. மொழிக்கு முதலில் வரும் வினா எழுத்துகள்
   1. ஆ, ஓ
   2. யா, ஓ
   3. எ, ஆ
   4. எ, யா

1 2 3 4

14. தொன்றுதொட்டு ஈழம் முழுவதும் பரந்து வாழ்ந்தவர்கள்
    1. தமிழர்
    2. பறங்கியர்
    3. போர்த்துக்கேயர்
    4. ஆங்கிலேயர்

15. மாந்த வாழ்வின் அடிப்படைத் தேவைகள்
    1. உணவு, உடை, உறையுள்
    2. உணவு, பணம், உடை
    3. உடை, பொன், உறையுள்
    4. உணவு, உடை, பொன்

16. எழிலனது வீடு அழகானது. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை
    1. நான்காம் வேற்றுமை
    2. இரண்டாம் வேற்றுமை
    3. ஆறாம் வேற்றுமை
    4. ஏழாம் வேற்றுமை

17. சுடர், வெளிச்சம், கதிர் போன்ற சொற்கள் குறிப்பது
    1. இருள்
    2. கவின்
    3. புவி
    4. ஒளி

18. நாளை பள்ளிக்குப் போவேன். இதில் வரும் தோன்றா எழுவாய்
    1. நாம்
    2. நீ
    3. நான்
    4. அவன்

19. கொடியில் குலையாக இணைந்திருந்து ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது
    1. பலாப்பழம்
    2. நாவற்பழம்
    3. மாம்பழம்
    4. முந்திரிகைப்பழம்

20. நாம் அகவுணர்விலும் புறவுணர்விலும் பேணவேண்டியவை
    1. எமது அடையாளங்கள்
    2. நாகரிக மாற்றங்கள்
    3. பிற இனத்தவரது பண்பாடுகள்
    4. தீயபழக்கங்கள்

(20 x 1 = 20 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமையச் சொல்லியம் எழுதுக.**

1. **அணை**

பெயர்: ____________________

வினை: ____________________

2. **ஆடு**

பெயர்: ____________________

வினை: ____________________

(2 X 2 = 4 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள வினையடிகளின் பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றை எழுதுக.**

| வினையடி | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| எழுது | | |
| அழு | | |
| பாடு | | |

(6 X 1 = 6 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வன்னியின் வரலாற்றில் கலந்துள்ளவை எவை?

______________________________________________

______________________________________________

2. ஈழத்தில் அரச ஆட்சிமுறை உருவாக்கத்திற்கான காலம் எது?

______________________________________________

______________________________________________

3. உலகில் வாழும் மக்கள் எக்காரணங்களால் துன்புற்று வாழ்கின்றனர்?

______________________________________________

______________________________________________

4. சங்ககால இலக்கியங்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன?

______________________________________________

______________________________________________

5. பார், படி - வினையடிகளை இறந்தகாலப் பன்மை வினைமுற்றுகளாக எழுதுக.

பார்: ____________________ படி: ____________________

6. பின்வரும் சொல்லியங்களில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகளை எழுதுக.

   1. சிறுவன் எழுதுகோலால் எழுதினான். ____________________
   2. நான் தேர்வுக்குப் படித்தேன். ____________________

7. எழுவாய் அடைமொழி இடம்பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________________________

______________________________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**5. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கல்வியின் மிக்கதாம் செல்வமொன்று இல்லையே
கண்மணி கேளடா நீ என்றன் சொல்லையே!
செல்வம் பிறக்கும் நாம் தந்திடில் தீர்ந்திடும்
கல்வி தருந்தொறும் மிகச் சேர்ந்திடும்

கல்வியுள்ளவரே! கண்ணுள்ளார் என்னலாம்
கல்வியில்லாதவர் கண் புண்ணென்றே பன்னலாம்
கல்வி மிகுந்திடில் கழிந்திடும் கடமை!
கற்பதுவே உன் முதற் கடமை

\- பாரதிதாசன்

1. நாம் தந்திடில் தீர்வது எது?

________________________________________

2. கல்வி தருந்தொறும் என்ன செய்யும்?

________________________________________

3. கண் உள்ளவர் யார்?

________________________________________

4. முதற் கடமை எது?

________________________________________

5. இப்பாடலில் யாருக்கு அறிவுரை கூறப்படுகிறது?

________________________________________

(5 x 1 = 5 புள்ளிகள்)

6. **தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

**ஆங்கிலம்:**

1. The children played happily.
2. I went home from school.
3. Velan drew a beautiful picture.
4. There is a computer in my classroom.
5. Ezhili wrote Tamil examination.

**யேர்மனி:**

1. Die Kinder spielten fröhlich.
2. Ich ging von der Schule nach Hause.
3. Velan malte ein schönes Gemälde.
4. In meinem Klassenzimmer befindet sich ein Computer.
5. Ezhili schrieb eine tamil Sprachprüfung.

**நோர்வே:**

1. Elevene lekte med fornøyelse.
2. Jeg gikk hjem fra skolen.
3. Velan tegnet et fint bilde.
4. Det er datamaskin på mitt klasserom.
5. Ezhili skrev tamileksamen.

**இத்தாலி:**

1. I bambini giocavano felicemente.
2. Io sono tornato a casa da scuola.
3. Velan ha disegnato un bel dipinto.
4. Nella mia classe c'è un computer.
5. Ezhili ha scirtto l'esame di Tamil.

**நெதர்லாந்து:**

1. De kinderen speelden vrolijk.
2. Ik ging vanuit school naar huis.
3. Velan schilderde een mooie schilderij.
4. In mijn klaslokaal staat een computer.
5. Ezhili schreef het Tamil examen.

**டென்மார்க்:**

1. Børnene legede glade.
2. Jeg gik hjem fra skolen.
3. Velan tegnede en flot tegning.
4. I mit klasseværelse er der en computer.
5. Ezhili skrev eksamen i det tamilske sprog.

**சுவீடன்:**

1. Barnen lekte glatt.
2. Jag gick hem från skolan.
3. Velan målade en fin målning.
4. I mitt klassrum finns det en dator
5. Ezhili skrev tamilspråksprov.

**பின்லாந்து:**

1. Lapset leikkivät iloisesti.
2. Menin koulusta kotiin.
3. Velan piirsi yhden kauniin piirustuksen.
4. Minun luokassani on tietokone.
5. Ezhili kirjoitti tamili kielen kokeen.

**தமிழ்:**

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

(5×1=5 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. சமூகவலைத்தளங்கள்
2. கூத்து
3. எனது பொழுதுபோக்கு

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- பொதுவான பொழுதுபோக்குகள்
- விரும்பும் பொழுதுபோக்கு
- விரும்புவதற்கான காரணங்கள்

(15 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

எமது தாயகத்தின் வளங்களுள் பனைமரங்களும் அடங்கும். இவை தமிழர் தாயகத்தின் அடையாளமாகவும் விளங்குகின்றன. பனைமரம் வறண்ட நிலங்களில் நன்கு வளரும். இது தாயகத்தின் யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு போன்ற இடங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. இளம் பனையை வடலி என்று அழைப்பார்கள். பனைமரத்தின் எல்லாப் பகுதிகளும் பயன்தருபவையாக இருக்கின்றன. பனையோலைகள் வீடு வேய்வதற்கும் கைவினைப் பொருள்கள் செய்வதற்கும் பயன்படுகின்றன. பனையிலிருந்து செய்யப்படும் உணவுப் பொருள்களான ஒடியல், பனாட்டு, பனங்கட்டி போன்றன மருத்துவக்குணம் மிக்கவை. எம் தாயகத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதில் பனைமரங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழரது வாழ்வோடு மிக நெருக்கமாக இணைந்திருக்கும் பனைமரங்கள், இப்போது பெருமளவில் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தடுத்து, பனைவளத்தை நாம் பாதுகாக்க வேண்டும்.

1. பனை எப்படிப்பட்ட நிலங்களில் வளரும்?

______________________________

______________________________

2. தாயகத்தில் பனை அதிகமாகக் காணப்படும் இடங்கள் நான்கு எழுதுக.

______________________________

______________________________

3. இளம் பனையை எவ்வாறு அழைப்பார்கள்?

______________________________

______________________________

4. பனையோலை எவற்றுக்குப் பயன்படுகின்றது?

______________________________

______________________________

5. பனையிலிருந்து செய்யப்படும் உணவுப் பொருள்கள் எவை?

______________________________

______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. அறிவித்தலை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

**தமிழர் திருநாளை முன்னிட்டு,**
**சுவீடன் தமிழ் இளையோரால் நடத்தப்படும் தமிழ்த்திறன் போட்டி**

மாணவர்களே!
உங்கள் தமிழ்த்திறன்களை வளர்த்துக் கொள்ள நல்லதொரு வாய்ப்பு!

**கீழ்ப்பிரிவு: 6 - 10 அகவைக்குட்பட்டோர்**
ஆத்திசூடி, கொன்றை வேந்தன்

**மேற்பிரிவு: 11 - 16 அகவைக்குட்பட்டோர்**
திருக்குறள்: அதிகாரங்கள் - கல்வி, ஒழுக்கமுடமை

- இணையவழி ஊடாகப் போட்டிகள் நடைபெறும்.
- போட்டி நடைபெறும் நாள்: 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை
- பங்குபற்ற விரும்புவோர் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் மூலம் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்ப முடிவு நாள்: 20.12.2023

1. தமிழ்த்திறன் போட்டி தமிழர் திருநாளை முன்னிட்டு நடத்தப்படுகிறது. (      )
2. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்பவை மேற்பிரிவுக்கு உரியவை. (      )
3. இப்போட்டி இணையவழி ஊடாக நடைபெறும். (      )
4. 20.12.2023 போட்டிக்கான விண்ணப்ப முடிவு நாள் ஆகும். (      )
5. போட்டியை நடத்துவோர் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள். (      )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 04 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |